நம்பிக்கைச் சுடர்

நம்பிக்கையால், நம்பிக்கையில் ஒளி வீச

சுடர் 36 - அக்டோபர் 19

திருத்தூதர் யூதா ததேயு திருத்தலம்

42ஆம் ஆண்டு விழா கொண்டாட்டம்

வாணுவம்பேட்டை, சென்னை – 91.



42st Feast Celebration

ST JUDE'S SHRINE

திருவிழா நிகழ்வுகள் - 2019

திருக்கொடியேற்ற பெருவிழா

25.10.2019 - வெள்ளி **FLAG HOISTING**

மாலை 5.30 : திருக்கொடி பவனி அருட்சகோதரிகள் இல்லத்திலிருந்து புறப்படும் திருக்கொடி மந்தரிப்பு திருக்கொடியேற்றம் திருப்பலி.

தலைமை : **மேதகு ஆயர் Dr. லாரன்ஸ் பயஸ், தருமபுரி மறைமாவட்டம்**

சிந்தனை : **'நான் வாழ்கிறேன்'! 'நீங்களும் வாழ்வீர்கள்'!**

சிறப்பிப்போர் : இளையோர் இயக்கம் (அன்பு விருந்து வழங்கப்படும்).

நற்கருணை பெருவிழா

26.10.2019 - சனி **CORPUS CHRISTI**

மாலை 6.00 : நற்கருணை குணமளிக்கும் ஆராதனை, திருப்பலி.

தலைமை : **பணி. மைக்கேல் சுரேஷ், பங்குதந்தை - தச்சூர்**

சிந்தனை : **'விரும்புகிறேன்'. 'குணமாகு'.**

சிறப்பிப்போர் : புனித பிலிப்பு, புனித மத்தியாஸ், புனித லூக்கா, பரிசுத்த ஆவி, புனித அமல அன்னை, புனித பவுல், புனித யாகப்பர், புனித சூசையப்பர், புனித பார்த்தலமேயு அன்பியக் குடும்பங்கள்.

திருத்தேர் பெருவிழா

27.10.2019 - ஞாயிறு **FEAST CAR PROCESSION**

காலை 7.30 : முதல் நற்கருணை திருவிழா.

தலைமை : **பேரருள்பணி. பாக்கிய ரெஜிஸ், ஆயரின் பொது பதில் குரு - செங்கை மறைமாவட்டம்**

சிந்தனை : **'வாழ்வளிக்கும் உணவு நானே'.**

சிறப்பிப்போர் : புதுநன்மை பெறும் மறைக்கல்வி மாணவ மாணவியர்கள்

11.30 AM : **Feast Mass in English**

Main Celebrant: **Rev. Fr. Solomon**

மாலை 7.30 : ஆடம்பர தேர் பவனி. **நற்கருணை ஆசீரோடு நிறைவு பெறும்.**

சிந்தனை : மரியாயின் சேனையினர் மற்றும் பக்த சபைகள் (அன்பு விருந்து வழங்கப்படும்).

திருத்தூதரின் பெருவிழா

28.10.2019 - திங்கள் **FEAST MASS**

மாலை 6.00 : நன்றி திருப்பலி.

தலைமை : **பேரருள்பணி. அருள்ராஜ், அதிபர் - புனித தோமா தேசிய திருத்தலம் மற்றும் தோமையார் மறைவட்ட குருக்கள்**

சிந்தனை : **'வாழ்வில் காட்டுதலே வான் இறை கேட்கும் நன்றி'.**

சிறப்பிப்போர் : புனித அன்னை தெரசா, புனித அல்போன்சா, புனித மாற்கு, புனித தாமஸ், புனித சீமோன், புனித அக்குவினாஸ், புனித மத்தேயு, புனித யூதா ததேயு, புனித ஆண்ட்ரூஸ்

திருத்தல அதிபரிடமிருந்து

வணக்கமும், வாழ்த்துக்களும்,

நம் திருத்தலம் இரண்டு சவால்களை எதிர்நோக்கி இருக்கின்றது. நெடுஞ்சாலை துறையினர் சாலை விரிவாக்கத்திற்காக திருத்தல வளாகத்தில் மூன்று மீட்டர் எடுப்பதற்காகவும், மெட்ரோ தொடர் வண்டி நிர்வாகத்தினர் வானுவம்பேட்டையில் மெட்ரோ நிலையம் அமைக்க நம் திருத்தலத்தின் உள்ளே பாதி அளவு வரை எடுக்க திட்டமிட்டு குறியீடு செய்துள்ளனர். அதிகாரிகள், ஆட்சியாளர்கள் அளவிலும் நீதித்துறை மூலமாகவும் நம் திருத்தலம் கையகப்படுத்தப்படுத்துவதை தவிர்க்குமாறு பல முயற்சிகளை எடுத்துள்ளோம்.

அரசாங்கத்தின் வளர்ச்சி திட்டங்களுக்கு நாம் எதிரானவர்கள் அல்ல. ஆனால் முடிந்தவரை அரசு நிலங்களையே பயன்படுத்த வேண்டும் என அரசாணை உள்ளது. நம் திருத்தலத்திற்கு அருகாமையில் அரசு நிலம் உள்ளது. அதை அவர்கள் பயன்படுத்திக் கொள்ளலாம். மேலும் நம்மிடம் 2.5 கிரவுண்டு நிலம் மட்டுமே உள்ளது. இதுவே நமக்கு போதவில்லை. ஒவ்வொரு நாளும் எண்ணற்றவர்கள் வந்து செல்கிறார்கள். இவர்கள் பல மதங்களைச் சார்ந்தவர்கள். பல புதுமைகளும் நடக்கின்றன. இந்த இடத்தை நாம் இழக்க முடியாது. நம் உயிரினும் மேலான இத்திருத்தலத்தை ஒரு போதும் விட்டு தர இயலாது என்பது தான் நம்முடைய நிலைப்பாடு. உனக்கு விரோதமாய் உருவாக்கப்படும் எந்த ஆயுதமும் வாய்க்காதேபோம். (எசாயா 54:17) என்னும் இறைவனின் வாக்குறுதிக்கேற்ப இத்திருத்தலத்திற்கு எதிரான அனைத்து சவால்களையும் முறியடிக்க ஒரு குடும்பமாய் தொடர்ந்து உபவாசத்தோடு செபிப்போம்.

விவிலிய மாதத்தை சிறப்பித்த அனைவருக்கும் பாராட்டுக்கள். ஒவ்வொருவருக்கும் ஒரு விவிலியம், நாளுக்கொரு அதிகாரம் என்பது நம் இலக்கு. தொடர்ந்து செயல்படுத்துவோம்.

இம்மாதம் நம் பாதுகாவலரின் விழாவை கொண்டாடுகிறோம். தினமும் செபமாலை செபித்து, புனித யூதாவின் நவநாள் சொல்லி வியாழக்கிழமைகளில் ஒரு வேளை உபவாசம் இருந்து பங்கு திருவிழா கொண்டாட்டத்திற்காக ஆயத்தமாவோம்.

ST. JUDE'S SHRINE ★ VANUVAMPET, CHENNAI-91 ★

இப்படிக்கு,

பணி. மார்ட்டின் ஜோசப்

திருத்தந்தை பிரான்சிஸ் மறையுரை



திருப்பணி ஓர் அருள்கொடை, அது பற்றி தியானிக்க வேண்டும் 'நீ பெற்றுள்ள அருள்கொடையை குறித்து அக்கறையற்றவனாய் இராதே' என, புனித பவுலடிகளார், திமொத்தேயுவிடம் கூறியுள்ளது குறித்து, அருள்பணியாளர்கள் எல்லாரும், தங்களின் இறைப்பணியில் சிந்திக்குமாறு திருத்தந்தை அழைப்பு விடுத்தார்.

திருப்பணிக் குருத்துவம், ஒரு கொடை, அது போற்றப்பட்டு பகிர்ந்துகொள்ளப்பட வேண்டும் என்று, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், செப்டம்பர் 19, வத்திக்கானில் தான் தங்கியிருக்கும் சாந்தா மார்த்தா இல்லச் சிற்றாலயத்தில் நிறைவேற்றிய திருப்பலியில் கூறினார்.

திருப்பணிக் குருத்துவம் பற்றி திருப்பலியில் தியானித்த திருத்தந்தை, திருத்தொண்டர்கள், அருள்பணியாளர்கள் மற்றும் ஆயர்கள் அனைவரும், மற்றவருக்கு தொண்டுபுரிய வேண்டும் என்பதற்காக, இயேசு இந்தக் கொடையை அவர்களுக்கு அருளுகிறார் என்று கூறினார்.

காலையில் நிறைவேற்றிய திருப்பலியில் பங்குக்கொண்ட, குருத்துவ வெள்ளி விழாவைச் சிறப்பித்த அருள்பணியாளர்கள் மற்றும் ஆயர்கள் பலரிடம் இவ்வாறு கூறினார். திருத்தந்தை.

புனித பவுலடிகளார் திமொத்தேயுவுக்கு எழுதிய முதல் மடலிலிருந்து (1 திமொ 4:12-16), எடுக்கப்பட்ட முதல் வாசகத்தை மையப்படுத்தி மறையுரையாற்றிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், திருப்பணிக் குருத்துவத்தில் பெற்ற அருள்கொடையைப் புறக்கணிக்க வேண்டாமென கேட்டுக்கொண்டார்.

திருப்பணிக் குருத்துவம், நான் கட்டாயம் செய்ய வேண்டும் என்ற வேலை ஒப்பந்தம் அல்ல, வேலை செய்ய வேண்டும் என்பது இரண்டாவது இடம் தான், ஆனால், இந்த அருள் கொடையை நான் பெற்று, அதை அக்கறையுடன் பராமரிக்க வேண்டும் என்று தியானிப்பதே முதலாவது செய்ய வேண்டியது, அவ்வாறு செய்கையில், மற்றவையனைத்தும் அதிலிருந்தே பொங்கி வருகின்றது என்று திருத்தந்தை தெரிவித்தார்.

நாம் இந்த அருள்கொடையின் தகுதியை மறந்தால், அது ஒரு செயல்பாடாக மாறிவிடும். அப்போது திருப்பணியின் முக்கியத்துவத்தையும், நம்மை நோக்கி 'என்னைப் பின்செல்' என்ற இயேசுவின் உற்றுநோக்குதலையும் இழந்துவிடுவோம் என்றும் திருத்தந்தை கூறினார்.

நற்செய்தியில் வருகின்ற பரிசேயர் செய்ததுபோல் (லூக் 7:36 -50), அதாவது அவர் இயேசுவுக்கு தனது வீட்டில் விருந்தளித்தபோது, உபசரிப்பின் பல விதிமுறைகளை அவர் மறந்தது போல, திருப்பணி குருத்துவத்தில் பெற்ற அருள்கொடையின் கூற்றை மறப்பது மனித இயல்பு என்பதையும் திருத்தந்தை குறிப்பிட்டார்.

திரு அவையில், திருப்பொழிவு பெற்றுள்ள அனைத்து திருப்பணியாளர்களும், குறிப்பாக 25ம் ஆண்டு நிறைவைச் சிறப்பிப்பவர்களும் இந்த அருள்கொடையை அக்கறையுடன் பராமரிப்பதற்கும், எல்லாவற்றிற்கும் மேலாக, திருப்பணி குருத்துவத்தை ஓர் அருள்கொடையாக நோக்கவும், அந்நோக்கத்தின்படி பணியாற்றவும் வேண்டுமென செபிப்போம் என்று திருத்தந்தை கூறினார். இதன் வழியாக, அவர்கள், தொழில்முனைவோர் அல்லது நற்பணியாற்றுவோர் என மாறுவதைத் தவிர்க்க இயலும் எனவும் கூறி, தன் மறையுரையை நிறைவுச் செய்தார், திருத்தந்தை பிரான்சிஸ்.

வாடிகன் நகரம்

வாடிகன் நகரம் எங்குள்ளது?

இத்தாலியின் ரோம் நகருக்குள் அமைந்துள்ளது வாடிகன் நகரம். இது ரோமின் இதயம் எனப்படுகிறது.

வாடிகன் நகரின் சிறப்பு என்ன?

ஒரு நகருக்குள் அமைந்திருந்தாலும் இது தனி நாடு அந்தஸ்து பெற்றதாகும். உலகின் சிறிய நாடு இதுதான். இதன் பரப்பு ஒரு கிலோமீட்டுருக்கும் குறைவாகும். 0.17 சதுர மைல் பரப்பளவு கொண்டது வாடிகன் நகரம். தனி அரசாங்கமும் தனி கொடியும் கொண்டதாகும்.

யார் இந்த நாட்டை ஆள்வது?

போப் ஆண்டவர் தான் இந்த நாட்டின் தலைவர் ஆவார். கவர்னரின் வழியாக ஆட்சி நடத்துவார்.

வாடிகன் நகரம் எப்போது தனி நாடானது?

1929 முதல் இது தனி நாடாக விளங்குகிறது.

இந்த நாட்டின் தலைமை இடமாக விளங்குவது எது?

ரோமன் கத்தோலிக்க தேவாலயம் தான் இந்த நாட்டின் தலைமை இடமாகும்.

மாறாத ராணுவ உடை:

இந்த நாட்டை பாதுகாக்க சுவிஸ்கார்டு எனப்படும் சிறிய பாதுகாப்பு படை செயல்படுகிறது. இந்த காவல்படைக்கு மைக்கல் ஏஞ்சலோ வடிவமைத்த பழமையான உடையே இன்றும் சீருடையாக வழங்கப்படுகிறது. 450 ஆண்டுகளாக இந்த ஆடையில் எந்த மாற்றமும் செய்யப்படவில்லை. இந்த உடை அறிமுகமான பின்பு ஒரே ஒருமுறை கண்ணீர் புகை குண்டுகளை எடுத்து செல்வதற்காக உடையில் பை மட்டும் சேர்க்கப்பட்டது. பின்னர் சுமார் 4 நூற்றாண்டுகளுக்கும் மேலாக எந்த மாற்றமும் இல்லாமல் பயன்பாட்டில் உள்ளது.

போப் ஆண்டவர்: (திருத்தந்தை பிரான்சிஸ்)

அர்ஜென்டினாவைச் சேர்ந்த ஜார்ஜ் மரியோ பேர்க்கோக்லியோ (பிரான்சிஸ்) ரோமன் கத்தோலிக்க திருச்சபையின் 266- வது தலைவராக கடந்த 2013 -ம் ஆண்டு மார்ச் மாதம் நியமிக்கப்பட்டார். 1200 ஆண்டுகளுக்கு மேலான திருச்சபை நிர்வாகத்தில் இவர்தான் ஐரோப்பியர் அல்லாத முதல் போர் ஆண்டவர் என்ற பெருமைக்குரியவர், இவர் ஏசு சபையை சேர்ந்தவர்.

திவ்ய திருப்பலி

திருப்பலி பற்றி புனிதர்கள் என்ன சொல்கிறார்கள்?

அர்ச் லாரென்ஸ் யுஸ்தீனியன்:

திருப்பலியைப் போல மிக மேலான, கடவுளுக்கு மிகப்பிரியமான, நமக்கு மிகப் பயனுள்ள செபமோ, நற்செயலோ உலகில் வேறு எதுவுமில்லை

அர்ச் அல்போன்ஸ் லிகோரியார்:

திருப்பலியை விட அதிக பரிசுத்தமானதும், அதிக நல்லதும், அதிக மேலானதுமான எதையும் கடவுளால் கூட செய்ய முடியாது.

அர்ச் அக்குவினாஸ் தோமையார்:

திருப்பலி என்பது கல்வாரிப் பலியை விட எந்த விதத்திலும் குறைந்ததல்ல என்றும், அது பீடத்தின் மீது புதுப்பிக்கப்படும் கல்வாரிப்பலியே என்றும், ஒவ்வொரு திருப்பலியும் சிலுவைப்பலி தருகின்ற அதே நன்மைகளை மனிதர்களுக்கு கொண்டு வருகின்றது என்றும் நமக்கு கற்பிக்கிறார்.

புனித தந்தை பியோ:

இந்த உலகம் சூரியன் இல்லாமல் கூட இருக்கும். ஆனால் திருப்பலி இல்லை என்றால் இந்த உலகமே இருக்காது.

அன்னை தெரசா:

ஒரு முறை அன்னை தெரசா கடவுளில் ஆழ்தியானத்தில் இருக்கும்போது "ஆண்டவரே உம்முடைய அளவில்லாத நன்மைத்தனத்திற்காக உமக்கு நன்றி சொல்ல வேண்டும்? எப்படி சொல்வது?" என்று கேட்டதற்கு ஆண்டவர் அளித்த பதில், "ஒரு திருப்பலியில் பங்குகொள்"

ஒரு புனிதரின் அனுபவம்:

கொலோனின் மேற்றிராணியரான அர்ச் ஹேனான் என்பவர் ஒரு முறை பூசையின் தேவ வசீகரத்தின்போது வார்த்தைக்கெட்டாத பேரழகுள்ள ஒரு ஒளி உருண்டையையும், திரு இரத்தப் பாத்திரத்தைச் சுற்றி ஒரு மிகப்பெரிய பிரகாசமான ஒளி வட்டத்தையும் கண்டார். அதன் பின் அவை திருப்பாத்திரத்துனுள் நுழைவதையும் கண்டார். இது அவரை எந்த அளவிற்கு ஒரு பரிசுத்தமான அச்சத்தால் நிரப்பியது என்றால், தொடர்ந்து பூசை வைக்க முடியாமல் அவர் பயத்தால் தடுமாறிப்போனார். ஆனால் நம் மனித கண்களுக்கு தெறியாவிட்டாலும், இது ஒவ்வொரு பூசையிலும் நிகழ்ந்துகொண்டுதான் இருக்கிறது என்று கடவுள் அவருக்கு வெளிப்படுத்தினார்.

(சங். பவுல் ஓ சலைவன், O.P. அவர்கள் எழுதிய "திவ்விய பலிபூசையின் அதிசயங்கள்" என்ற நூலிலிருந்து)

ஆகவே, எவ்வளவு மேன்மைமிக்கது திருப்பலி. இறைவன் இயேசு சுவாமி நமக்காக பிரசன்னமாகும் இந்த தெய்வீக திருப்பலியில், ஒரு இதய தாகத்தோடு, விசுவாசத்தோடு, இயேசுவின் மீது முழு நம்பிக்கை வைத்து முழு பக்தியோடு பங்கு கொள்வோம்?

இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!

செபத்தைப் பற்றிய சில உண்மைகள்

செபம் ஒரு நாளும் தோற்றுப் போகாது.

செபம் ஒரு நாளும் குறி தவறாது.

செபம் நினைத்ததை சாதிக்கும்.

செபம் இறைமக்களின் ஆயுதம்.

செபம் சாத்தானை துரத்தி விடும்.

செபம் தேசத்தைப் பாதுகாக்கும்.

செபம் பரிந்து பேசும்.

செபம் வல்லமை மிக்கது.

செபம் நன்மையை உருவாக்கும்.

செபம் காரியங்களை மாற்றும்.

செபம் ஜெயத்தை உண்டாக்கும்.

செபம் கிறிஸ்தவர்களின் நாடித்துடிப்பு.

செபம் செய்வோம் இயேசுவின் பிள்ளைகளாய் வாழ்வோம்.

தொடர்பு

வாசகர்களாகிய உங்கள் மேலான விமர்சனங்கள், கருத்துக்கள், படைப்புக்கள் மற்றும் ஜெப விண்ணப்பங்கள் வரவேற்கப் படுகின்றன.
தெரிவிக்கப் படவேண்டிய முகவரி:

நம்பிக்கைச் சுடர் இதழ்,
திருத்தூதர் யூதா ததேயு திருத்தலம்,
எண்-9, மேடவாக்கம் மெயின் ரோடு, வாணுவம்பேட்டை, சென்னை-91

“Or mail to”
flameofhope@st-judeshrine.com
Like our page & get all updates from
Fb page - http://www.facebook.com/st-judesshirinevanuvampet/
website-http://www.st-judesshrine.com
உங்களுடைய மேலான ஒத்துழைப்புக்கு நன்றி.

குடும்ப ஜெபமாலை

இன்றைய பரபரப்பான உலகில் ஒரே குடும்பமாக சேர்ந்து பேச, உணவருந்த நேரம் கிடையாது. ஏன் கணவன், மனைவி, குழந்தைகள் மூவரையும் ஒரே நேரத்தில் வீட்டில் பார்ப்பதே அரிதாகி விட்டது. ஏதாவது ஒன்றை தேடிக்கொண்டே நமது வாழ்க்கைப் பயணம் செல்கிறது. கடவுளைத் தேடுவது என்பது கடினமாகிவிட்டது. குடும்பமாக அமர்ந்து ஜெபிப்பது என்பது எத்தனை இனிமையானது, எத்தனைபலம் வாய்ந்தது என்று சுவைத்து பார்த்தால் மட்டும் தான் புரியும்.

ஒரு காலத்தில வீடுகளில் மாலையில் அனைவரும் கூடி ஜெபித்து அதன் பின்னர் இரவு உண்வு உண்ட காலமுண்டு. இன்று அனைவரும் கூடி தொலைக்காட்சிக்கு முன் அமர்ந்து நாடகங்களிலும், திரைப்படங்களிலும் பொழுதைப் போக்கி வெறுமையாகிப் போகிற காலமாகி விட்டது.

குடும்ப ஜெபமில்லாத வீடு- கூரையில்லாத வீடு

கூரையில்லாத வீட்டில் விஷ ஜந்துக்களும், திருடர்களும், ஆபத்துக்களும் அழைக்காமலே உள்ளே வரும். அதே போல்தான் குடும்ப ஜெபமில்லாத வீட்டில் பிரச்சனைகளும், துன்பங்களும், துயரங்களும் எளிதில் தாக்கும். அதே நேரத்தில் ஜெபிக்கிற இல்லத்திலும், உள்ளத்திலும், துன்பங்களையும், துயரங்களையும் தாங்கக்கூடிய சக்தியை இறைவன் தருவார். குடும்பங்களில் குடும்ப ஜெபம் நாள்தோறும் ஜெபிக்கப்பட வேண்டும். பிள்ளைகளைச் ஜெபிக்கச் சொல்லி பெற்றோர்கள் தூண்ட வேண்டும். ஜெபமாலை எப்போதும் ஒரு குடும்பச் செபமாகவும், ஒரு குடும்பத்திற்கான ஜெபமாகவும் இருந்திருக்கிறது என்று புனித இரண்டாம் ஜான் பால் கூறுகிறார். ஜெபமாலையில் நாம் ஜெபிக்கக்கூடிய ஒவ்வொரு வார்த்தைகளும் திருவிவிலியத்தில் இருந்து எடுக்கப்பட்டது (லூக் 1:28) நாம் ஜெபமாலை ஜெபிக்கின்றபோது கடவுளது வார்த்தையைதான் தியானித்து ஜெபிக்கிறோம். அன்னையை ஒவ்வொரு முறையும் அருள் நிறை மரியே வாழ்க! என்று வாழ்த்தும்போது இறைவனுக்குப் பெருமை சேர்க்கிறோம்.

ஜெபமாலை என்பது "மானிடர்களை மீட்க வானவர் விடுகின்ற வடமே" வீராமாமுனிவரின் கூற்றுப்படி நம்மை பாவ வழியில் இருந்து மீட்க வந்த வல்லமை மிக்க ஜெபமாலை ஜெபிப்போம். கூடி ஜெபித்தால் கோடி நன்மை என்பதற்கேற்ப குடும்பமாக கூடி ஜெபிப்போம். 1 தெச 5:17, 19ல் கூறியுள்ளபடி நல்லதைப் பற்றிக் கொள்ளுவோம். எல்லா வகையான தீமைகளையும் விட்டு விலகுவோம்.

ஜெபமாலை அருள் வரங்களின் கிரீடம் என்ற தந்தை பியோவின் வார்த்தைக்கேற்ப ஜெபமாலை ஜெபிப்போம். ஏராளமான அருள் வரங்களை இறைவனிடமிருந்து பெறுவோம். அக்டோபர் மாதம் ஜெபமாலை அன்னைக்குரிய மாதம். ஜெபமாலை ஜெபிப்போம். ஜெயம் பெறுவோம்.

நிச்சயமாக உங்கள் செபத்திற்கு பதில் உண்டு

ரேடியோவை கண்டுபிடித்த "மார்க்கோனி" சிறுவயதாய் இருந்தபோது ஒருநாள் தன்னுடைய தகப்பனார் செபித்து கொண்டிருப்பதை பார்த்து சிரித்துகொண்டு இருந்தார்.

தகப்பனார் மகனை பார்த்து ஏன் சிரிக்கிறாய் என்று கேட்டார்.

அதற்கு மார்கோனி, அப்பா....... நீங்கள் பரலோகத்தில் இருக்கிற எங்கள் பிதாவே என்று செபித்தீர்கள், அந்த பரலோகம் எங்கே இருக்கிறது? என்று கேட்டார். அதற்கு தந்தை மேலே கை காண்பித்தார்.

மேலே பரலோகத்தில் இருக்கிற பிதாவுக்கு இங்கு இருந்து நீங்க செய்கிற செபம் எப்படி கேட்கும்? பக்கத்திலிருக்கிற எனக்கே கேட்கமாட்டேங்கிறது என்று பரியாசமாய் கேட்டார்.

அதற்கு தந்தை என்ன பதில் சொல்வது என்று தெரியாமல் மறுபடியும் முழங்கால் போட்டு ஆண்டவரே நீரே என் மகனுக்கு புரிய வையும் என்று செபித்துவிட்டு போய்விட்டார்.

மார்க்கோனி ரேடியோ கண்டுபிடித்தபின் தன்னுடைய ஊரிலே நடந்த பாராட்டு விழாவில்..........

என்னுடைய சிறுவயதிலே என் தந்தையிடம் நான் கேட்ட ஒரு கேள்விக்கு ஆண்டவர் என் வழியாகவே எனக்கு பதில் சொல்லிவிட்டார். எப்படியெனில் நான் கண்டுபிடித்த இந்த ரேடியோவை ஒரு குறிப்பிட்ட இடத்தில் வைத்து கேட்கும்போது முன்னூற்று இருபது கி.மீ தொலைவில் இருக்கும் மற்றொரு இடத்தில் ஒளிப்பரப்பாகும் நிகழ்ச்சிகளை எந்த நேரத்தில் ஒளிபரப்பப்படுகிறதோ அதே நேரத்தில் இங்கேயும் கேட்க முடியும்.

சாதாரண ஆறறிவுள்ள மனிதனாகிய நான் கண்டுபிடித்த இந்த ரேடியோவே இப்படி கேட்கும்போது என்னை படைத்த ஆண்டவர் நிச்சயமாக என் தகப்பன் செய்த செபத்தை கேட்பார் என்று சொன்னார்.

நிச்சயமாக உங்கள் செபத்திற்கு பதில் உண்டு.
திருப்பாடல்கள்: 66: 20

என் மன்றாட்டைப் புறக்கணியாத கடவுள் போற்றி!
தம் பேரன்பை என்னிடமிருந்து நீக்காத இறைவன் போற்றி!

ஜெபமாலைக்கு முன் தியானிக்கும் 3 மங்கள வாத்தையின் பணி

மகா பரிசுத்த கன்னி மரியாயின் மீது பக்தி கொண்டிருப்பது மீட்படைவதற்கும் முன்குறிக்கப்பட்டிருப்பதற்குமான மிக பெரிய அடையாளம் என்பது அர்ச்சியசிஷ்டவர்களின் வாக்கு திருச்சபையின் வேதபாரகர்களும் அர்ச் அல்போன்ஸ் மரிய லிகோரியாருடன் சேர்ந்து மாதா மீது பக்தி உள்ளவன் அழிந்து போகமாட்டான் என்று ஒரு பட கூறியுள்ளார்கள். மரியாயின் பிள்ளை அவலமாக சாகான் என்பது கத்தோலிக்க மக்களின் ஒரு மிகப்பெரிய நம்பிக்கை. அதே சமயம் மாமரியின் பக்தியில் மரணம் வரை நிலைத்திருக்கவும் வேண்டும் என்பதும் அவசியமே! இதற்கு உதவியாக இருப்பது 3 அருள் நிறைந்த ஜெபத்தின் பக்தி என்ற உன்னத சிநேக முயற்சியாகும்.

இந்த பக்தி முயற்சி 13ம் நூற்றாண்டில் அர்ச். மெட்டில்டாம்மாளுக்கு தேவதாயால் கொடுக்கப்பட்டது தமது மரண வேளையில் தேவதாய் உதவ வேண்டும் என்று மன்றாட, அவர்களுக்கு தேவதாய் காணப்பட்டு நீ ஒவ்வொரு நாளும் சிறப்பான முறையில் மூன்று அருள் நிறைந்த மரியாயே ஜெபத்தை சொல்லி வர வேண்டும் என்று விரும்புகிறேன் என்றார்கள்.

மாமரி அன்னை சொல்கிறார்கள்........

முதல் அருள் நிறைந்த மந்திரம்

பிதாவாகிய சர்வேசுரன் எனக்கு வழங்கியுள்ள அளவில்லாத வல்லமைக்கு மகிமையாக சொல்ல வேண்டும் பரலோகத்திலும், பூலோகத்திலும் கடவுளுக்கு அடுத்தப்படியாக சகல சிருஷ்டிகளுக்கும் மேலான வல்லமையை கொண்டிருக்கும்படியாக எனது ஆன்மாவை பிதாவாகிய சர்வேசுரன் உயர்த்தியதற்கு மகிமையாக சொல்ல வேண்டும்.

இரண்டாவது அருள் நிறைந்த ஜெபம்

சுதனாகிய சர்வேசுரன் புத்திக் கெட்டாத அவரது ஞானத்தை எனக்கு அளித்துள்ள மகிமைக்காக சொல்ல வேண்டும். உன் மரண வேளையில் உன் ஆன்மாவை இத்தகைய ஞானத்தால் நிரப்புவேன். அதனால் அறியாமை மற்றும் தப்பறையின் இருள் நீங்கும்.

மூன்றாவது அருள் நிறைந்த ஜெபம்

திவ்ய இஸ்பிரீத்துசாந்துவானவர் (பரிசுத்த ஆவியானவர்) எனது ஆன்மாவைத் தம் இனிமையான தேவசிநேகத்தாலும், இரக்கத்தாலும் நிரம்பிய மகிமைக்காகச் சொல்லப்பட வேண்டும். உனது கடைசி மரண நேரத்தில சாவின் கசப்பான பாத்திரத்தை மகிழ்ச்சி மற்றும் தெய்வீக இனிமையின் பாத்திரமாக மாற்றுவேன் என்று விளக்கி கூறினார்கள்.

மேலும் ஒரு சமயம் தேவமாதா அர்ச் ஜெர்த்ரூத்தம்மாளுக்கும் இது பற்றி எனது இந்த மூன்று அருள் நிறைந்த மந்திரம் பக்தி முயற்சியை பிரமாணிக்கத்துடன் ஜெபிக்கும் எந்த ஆன்மாவும் அவர்களின் இறுதி வேளையில் மோட்ச ஆறுதலையும் தேற்றுதலையும் அடையும்படியாக நான் அசாதாரண முறையில் மகிமை அலங்காரத்துடன் காணப்படுவேன் என்று வாக்களித்துள்ளார்கள்.

திருவிழா திருநிகழ்வுகள் நம்பிக்கைச் சுடர் இதழின் பின் அட்டைப் பகுதியில் கொடுக்கப்பட்டுள்ளன.

புனித ஃபிரான்சிஸ் பெற்ற இறையனுபவம்

1206ம் ஆண்டில் ஒருநாள் ஃபிரான்சிஸ் அசிசி நகர்ப் பள்ளத்தாக்கில் அமைந்திருந்த புனித தமியானோ கோவிலுக்குள் நுழைந்து இறைவேண்டல் செய்யச் சென்றார். அக்கோவில் பெரிதும் பழுதுபட்டு, பாழடைந்த நிலையில் இருந்தது. கோவிலின் உள்ளே சிலுவையில் அறையப்பட்ட இயேசுவின் திருவுருவம் சித்தரிக்கப்பட்ட ஒரு திருவோவியம் இருந்தது. அது பிசான்சிய-இத்தாலியக் கலைப் பாணியில் 12ம் நூற்றாண்டில் உருவாக்கப்பட்ட ஓவியம். கோவிலின் உள்ளே நுழைந்த ஃபிரான்சிஸ் இயேசுவின் திருச்சிலுவைத் திருவோவியத்தின் முன் மண்டியிட்டு உருக்கமாக வேண்டிக்கொண்டிருந்தார். அவர் இயேசுவன் திருமுகத்தை ஏறிட்டுப் பார்த்தபோது ஓர் அதிசயம் நிகழ்ந்ததைக் கண்டார். இயேசுவின் உதடுகள் அசைவதுபோலத் தெரிந்தது. இயேசுவின் குரல் தெளிவாகப் ஃபிரான்சிஸின் காதுகளிலும் உள்ளத்திலும் ஒலித்தது. ஃபிரான்சிஸ், என் வீடு பாழடைந்து கிடப்பதைப் பார்க்கிறாய் அல்லவா, எழுந்து சென்று அதைச் செப்பனிடு. என்று கேட்டது.

இச்சொற்களைக் கேட்ட ஃபிரான்சிஸூக்கு ஒரே அதிர்ச்சி. அக்குரல் எங்கிருந்து வந்தது என்று அறிவதற்காகக் கோவிலில் சுற்றுமுற்றும் பார்த்தார். இயேசுவே தம்மிடம் பேசுகிறார் என்பதை உணர்ந்ததும், ஃபிரான்சிஸ் "அப்படியே செய்கிறேன் ஆண்டவரே" என்று உற்சாகத்தோடு பதிலளித்தார். புனித தமியானோ கோவிலில் ஃபிரான்சிஸூக்கு ஏற்பட்ட அனுபவம் அவரது இறையனுபவத்தின் ஓர் உச்சக்கட்டமாக வரலாற்றாசிரியர்களால் கருதப்படுகிறது.

ஃபிரான்சிஸ் தம் வாழ்க்கை முழுவதையும் கடவுளுக்குப் பணிபுரிவதிலேயே செலவழிக்கப் போவதாக உறுதிபூண்டார். முதலில் புனித தமியானோ கோவிலைச் செப்பனிடுவது பற்றித்தான் சிலுவையில் தொங்கிய இயேசு தம்மிடம் கேட்டதாக ஃபிரான்சிஸ் நினைத்தார். ஆனால் நாள் போகப் போக தம்மிடம் இயேசு செய்யக் கேட்ட பணி விரிவான ஒன்று என்பதை அவர் உணர்ந்தார். இயேசுவின் பெயரால் கூடுகின்ற சமூகமாகிய திருச்சபையைச் சீரமைக்கவே இயேசு தம்மிடம் கேட்டார் என்பதைப் புரிந்துகொண்ட ஃபிரான்சிஸ் ஒரு புதிய வாழ்க்கை முறையைத் தழுவலானார். முதலில் அவர் தம் வீட்டுக்கு விரைந்து சென்று, தம் தந்தையின் துணிக்கடையில் இருந்த விலையுயர்ந்த துணிகள் பலவற்றை எடுத்து மூட்டையாகக் கட்டி தம் குதிரைமீது ஏற்றினார்.

அசிசி நகருக்கு அருகே இருந்த ஃபொலீனோ (Foligno) என்றும் நகர சந்தைக்குச் சென்று துணிகளையும், அவற்றோடு குதிரையையும் விலைபேசி விற்றுவிட்டு, கிடைத்த பணத்தை வாங்கிக் கொண்டு புனித தமியானோ கோவிலுக்குத் திரும்பிச் சென்றார். கோவில் குருவிடம் பணத்தைக் கொடுத்து, அக்கோவிலைச் செப்பனிடுமாறு கேட்டார். ஆனால் பணம் எங்கிருந்து வந்தது என்பதை அறிந்ததும் குரு அதை வாங்க மறுத்துவிட்டார். ஃபிரான்சிஸ் பணத்தை அங்கேயே போட்டுவிட்டு, தம் தந்தைக்கு அஞ்சி ஓரிடத்தில் போய் ஒளிந்து கொண்டார்.

ஒரு மாதத்திற்குப் பிறகு மறைவிடத்திலிருந்து வெளியே வந்த ஃபிரான்சிஸ் வீடு திரும்பினார். அவருடைய தந்தை பியேட்ரோ பெர்னார்டோனே ஃபிரான்சிலை வீட்டுக்கு இழுத்துக்கொண்டு போய், நையப்புடைத்து, அவரது கால்களில் சங்கிலியைக் கட்டி, அவரை ஓர் அறையில் அடைத்துப் போட்டார். பியேட்ரோ வீட்டில் இல்லாத நேரம் பார்த்து ஃபிரான்சிஸின் தாய் மகன்மீது இரக்கம் கொண்டு அவரை விடுவித்தார். ஃபிரான்சிஸ் மீண்டும் புனித தமியான் கோவிலுக்கு சென்று, தம் நாட்களை இறைவேண்டலில் கழித்தார்.

தூய எட்வர்ட் (அக்டோபர் 13)

"ஏழைக்கு இரங்கி உதவி செய்கின்றவர், ஆண்டவருக்கு கடன் கொடுக்கின்றார்" (நீமொ 19:15)

எட்வர்ட், பதினோறாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இங்கிலாந்தை ஆண்டுவந்த எதெல்ரெட் என்பவருக்கு மகனாக 1003 ஆம் ஆண்டு பிறந்தார். இவருடைய தாயார் எம்மா ஆவார். எட்வர்டுக்கு முன்பாக எல்லாமே கொட்டிக்கிடந்தாலும் அவர் மனம் இறைவனையும் ஏழைகளையும் தான் அதிகமாக நாடியது.

1013ஆம் ஆண்டு, இங்கிலாந்தின் மீது டானிஸ் என்ற இனக்குழுவினரின் படையெடுப்பு நடைபெற்றது. அந்தக் குழுவானது எட்வர்ட்டையும், அவருடைய பெற்றோரையும், மக்களையும் நாடு கடத்தி நார்மண்டி என்ற இடத்தில் குடியமர்த்தினார். நார்மண்டியில் குடியமர்த்தப்பட்ட சில நாட்களிலேயே எட்வர்ட்டின் தந்தை எதெல்ரெட் இறந்து போனார். அவருக்குப் பன் 1016ஆம் ஆண்டு எட்வர்டின் தாயாரை கனுட் என்பவர் கரம்பிடித்தார். அவர் இங்கிலாந்தை ஆண்டுவந்த டானிஸ் இனக்குழுவின் மீது போர்த்தொடுத்து இங்கிலாந்தை தனக்குச் சொந்தமாக்கினார். சில காலம் அவர் இங்கிலாந்து நாட்டின் அரசராக இருந்து பணியாற்றிவிட்டு இறந்து போனார். இதனால் அரசர் பதவி வெற்றிடமாக இருந்தது. இதனை வாய்ப்பாகப் பயன்படுத்திக்கொண்டு 1042ஆம் ஆண்டு, எட்வர்ட் இங்கிலாந்து நாட்டின் அரசரானார்.

1042ஆம் ஆண்டிலிருந்து 1066 ஆம் ஆண்டு வரை, அதாவது இறக்கும்வரை ஏறக்குறைய 24 ஆண்டுகள் இங்கிலாந்து நாட்டின் அரசராக இருந்த எட்வர்ட் ஓர் அரசராய் வாழ்ந்ததைவிடவும் துறவியாகத்தான் வாழ்ந்தார் என்று சொல்ல வேண்டும். நிறைய ஆலயங்களைக் கட்டி எழுப்பினார். இவரால் கட்டப்பட்ட மிகவும் சிறப்பு வாய்ந்த ஒரு கட்டிடம் தான் வெஸ்ட்மின்ஸ்டரில் உள்ள பேதுரு ஆப்பேயாகும். எட்வர்ட் பக்தி நெறியில் சிறந்து விளங்கினார். இது மட்டுமல்லாமல் ஏழைகளுக்கு வாரி வாரி வழங்கினார். தன்னுடைய வருவாயில் பத்திலொரு பங்கை ஆலய வளர்ச்சிப்பணிகளுக்காகவே கொடுத்தார். இப்படி செபத்தையும் நற்செயலையும் தன்னுடைய இரு கண்களாகக் கொண்டு செயல்பட்ட எட்வர்ட் 1066 ஆம் ஆண்டு இறையடி சேர்ந்தார். இவருக்கு 1161 ஆம் ஆண்டு புனிதர் பட்டம் கொடுக்கப்பட்டது.

தூய எட்வர்ட்டின் வாழ்க்கை வரலாற்றிலிருந்து நாம் கற்றுக்கொள்ள வேண்டிய மிக முக்கியமான பாடம், "செயலோடு கூடிய செபவாழ்வு வாழவேண்டும்" என்பதாகும். இன்றைக்குப் பலர் இறைவனிடத்தில் செபிக்கின்றார்கள். ஆனால் அவர்கள் செபிப்பதற்கு ஏற்ற வாழ்க்கை வாழ்கின்றார்களா? என்பது மிகப்பெரிய கேள்விக்குறியாக இருக்கின்றது. தூய யாக்கோபு தன்னுடைய திருமுகத்தில் கூறுவது போல, "செயல்வடிவம் பெறாத செபம், தன்னிலே உயிரற்றதாகிவிடும்". ஆகவே, நாம் செப வீரர்களாக மட்டுமல்லாமல், செயல்வீரர்களாகவும் மாற வேண்டும்.

நம்பிக்கை வியாழன் சாட்சி -1

கர்த்தருக்கு நன்றி! கர்த்தருக்கு நன்றி!

என் பெயர் M. சரவணன். என் மனைவி பெயர் D. தீபிகா. எங்களுக்கு திருமணம் முடிந்து ஆறு வருடங்கள் ஆகப் போகிறது. எங்களுக்கு குழந்தைப்பேறு தள்ளிக் கொண்டே சென்றது.

நாங்கள் எங்களால் முடிந்தவரை பல்வேறு மருத்துவமனைகளில் குழந்தைக்காக சிகிச்சை மேற்கொண்டு வந்தோம். மனதளவில் மிகவும் கஷ்டப்பட்டு வந்தோம். அப்பொழுது எங்கள் தெருவில் தெரிந்த ஒரு அம்மா அவர்கள் என் மனைவியிடம் வாணுவம் பேட்டையில் உள்ள இந்த ஆலயத்திற்கு சென்று பிராத்தனை செய்யுமாறு நம்பிக்கையுடன் கூறினார்கள்.

அதன்படி நானும், எனது மனைவியும் இங்கே வந்து கர்த்தரை பிராத்தனை செய்து வேண்டினோம். தற்போது கர்த்தர் எங்களுக்கு குழந்தை அருள் தந்துள்ளார். எனது மனைவி தற்பொழுது ஐந்து மாதம் கர்ப்பமாக உள்ளார். மகிழ்ச்சி.

கண்ணீர் நன்றியுடன்

07.09.2019
9962112280

திரு. சரவணன்
எண்: 8, அலெக்ஸ் தெரு,
உள்ளகரம், சென்னை.

நித்திய இளைப்பாற்றி தந்தருளும்

சோதனையை மனவுறுதியுடன் தாங்குவோர் பேறுபெற்றோர். ஏனெனில் அவர்களது தகுதி மெய்ப்பிக்கப்படும் போது தம்மீது அன்பு கொள்வோருக்குக் கடவுள் வாக்களித்த வாழ்வாகிய வெற்றி வாகையினை அவர்கள் பெறுவார்கள். (யாக் 1:12)

திருமதி. ரெம்ஜிஸ்
மண்ணில்: 03.11.1980
விண்ணில்: 16.09.2019

அழைத்தவன் உனை
அழைத்தான் நித்திய மகிழ்வில்
நிறைவடைய.............
இறையொளி உம்மேல் ஒளிர்ந்திட

உம் ஆன்மா இறைவனின் அமைதியில் இளைப்பாற்றி அடைந்திட செபிக்கிறோம்

பிரிவால் வாடும் குடும்பத்தார்க்கு எங்களின்
ஆழ்ந்த இரங்கலும், மற்றும் செபங்களும்

புனித லூக்கா - அக்டோபர் 18

நற்செய்தியாளரான புனித லூக்கா, ஒரு ஆதி கிறஸ்தவ எழுத்தாளரும், திருச்சபை தந்தையரும், புனித ஜெரோம் மற்றும் யோசிபஸின்படி விவிலியத்தின் லூக்கா நற்செய்தி மற்றும் அப்போஸ்தலர் பணி என்னும் நூல்களின் ஆசிரியரும் ஆவார். இவர் நான்கு நற்செய்தியாளர்களுள் ஒருவராகக் கருதப்படுகின்றார். இவரின் எழுத்து நடை, இவர் நன்கு கற்றறிந்தவர் என்பதனை எடுத்தியம்புகிறது.

அந்தியோக்கியா நகரில் பிறந்து வாழ்ந்த இவர், தொழில்ரீதியாக ஒரு மருத்துவர் ஆவார். இவரைப்பற்றிய மிகப்பழைய குறிப்பு திருத்தூதர் பவுல் எழுதிய பிலமோன் வசனம் 24, கொலோசையர் 4:14 மற்றும் திமொத்தேயு 4:11ல் காணக்கிடைக்கிறது.

இவர் இயேசுவின் பன்னிரு திருத்தூதர்களில் ஒருவர் அல்ல. மாறாக அவரின் 70 சீடருள் ஒருவராக இருக்கலாம் எனவும், குறிப்பாக உயிர்த்த இயோசுவோடு எமாவுசுக்கு சென்ற இரு சீடர்களுள் ஒருவராக இருக்கலாம் எனவும் விவிலிய அறிஞர்கள் கருதுகின்றனர்.

கலைஞராக லூக்கா:

எட்டாம் நூற்றாண்டில் தொடங்கப்பட்ட கிறிஸ்தவ பாரம்பரியம், லூக்காவை முதல் பிரபல ஓவியர் என்கிறது. அவர் வரைந்த இறைவனின் தூய அன்னை மரியாளுடைய, குழந்தை இயேசுவுடைய சித்திரங்கள் அதி பிரசித்தி பெற்றவை. முக்கியமாக, தற்போது காணாமல் போன ' கான்ஸ்டன்டினோபில்' (Constantibople) அருகேயுள்ள 'ஹோடேக்கெட்ரியா' (Hodegetria) அன்னையின் சித்திரம் பிரபலமானது.

பதினொன்றாம் நூற்றாண்டில், அவரது கைத்திறமைகளுக்காக, பல சித்திரங்கள் புனிதத்துவம் பெற்றன. எடுத்துக்காட்டாக, 'செஸ்டோசோவா'வின் 'கருப்பு மடோன்னா' (Black Modonna of Czestochwa and Our Lady of Vladimir) சித்திரம் முக்கியமானதாகும். இவர், புனிதர்கள் "பவுல்" மற்றும் "பேதுரு" ஆகியோரின் சித்திரங்களையும் வரைந்ததாக கூறப்படுவதுண்டு. அக்காலத்தில், ஒரு நற்செய்தி புத்தகத்தை நுண்ணிய முழு சுழற்சியுடன் விளக்கி எழுதியிருப்பதாகவும் கூறப்படுகின்றது.

அப்போஸ்தலர் புனிதர் பவுலின் சீடராகிய இவர், பிறகு பவுல் மறைசாட்சியாக மரிக்கும்வரை அவரைப் பின்பற்றுபவராக இருந்தார்.

திருமணமாகாத, குழந்தைகளில்லாத, தூய ஆவியார் நிரப்பப்பட்டிருந்த புனித லூக்கா, கடைசிவரை ஆண்டவருக்கு சேவை செய்வதிலேயே தமது ஆயுளைக் கழித்தார்.

இவர் தனது 84ம் வயதில் மரித்தார் என்பர்.

இவரது நினைத்திருவிழா நாள் அக்டோபர் மாதம், 18ம் தேதி ஆகும்.

விவிலிய பார்வை

விவிலிய பார்வையில் முடியாது.
போராட்டமில்லா வாழ்வில் மாற்றங்களை காண முடியாது. (யோபு14:14

மனிதர் மாண்டால் மறுபடியும் வாழ்வாரா? எனக்கு விடிவு வரும்வரை என் போராட்ட நாள்களெல்லாம் பொறுத்திருப்பேன்.

உபத்திரவமில்லா வாழ்வில் எவரும் உருவாக முடியாது. (எசாயா 48:10)
நான் உன்னைப் புடமிட்டேன்;
ஆனால் வெள்ளியைப் போலல்ல;
துன்பம் எனும் உலை வழியாய்
உன்னைத் தேர்ந்தெடுத்தேன்.

சோதனையற்ற வாழ்வில்
எவரும் சாதிக்க முடியாது.......... (யாக்கோபு 1:12)
சோதனையை மனவுறுதியுடன்
தாங்குவோர் பேறுபெற்றோர்....
ஏனெனில், அவர்களது தகுதி
மெய்ப்பிக்கப்படும் போது தம்மீது
அன்பு கொள்வோருக்குக் கடவுள்
வாக்களித்த வாழ்வாகிய
வெற்றிவாகையினை அவர்கள் பெறுவார்கள்.

தண்டனைக்கு தப்பாத எவரும் தேவனுக்கு பிள்ளையாக முடியாது.
(எபி. 12:5)
தம் பிள்ளைகளிடம் பேசுவது போல் இறைவன் உங்களுக்குத் தந்த பின்வரும் அறிவுரையை நீங்கள் மறந்து வீட்டீர்கள்.
"பிள்ளாய், ஆண்டவர் உன்னைக் கண்டித்துத் திருத்துவதை வேண்டாம் எனத் தள்ளிவிடாதே. அவர் கண்டிக்கும் போது தளர்ந்து போகாதே".

பாடுகளின் வழி செல்லாமல் பரலோகம் காண முடியாது.
(1 பேதுரு 4:13)
கிறிஸ்துவின் துன்பங்களில் நீங்கள்
இத்துணை பங்கு கொள்கிறீர்கள்
என எண்ணி மகிழுங்கள். அப்பொழுது
கிறிஸ்துவின் மாட்சி வெளிப்படும்
வேளையில் இன்னும் மகிழ்ந்து பேருவகை கொள்வீர்கள்.

திருமதி. மரிய ஆண்டனி ரெம்ஜிஸ், வாணுவம்பேட்டை

அக்டோபர் மாத விவிலிய வினாக்கள் (எஸ்தர்)

1. மன்னர் பிறநாட்டினருக்கு எத்தனை நாட்களுக்கு விருந்தளித்தார்?
2. மொர்தெக்காயின் தந்தையின் சகோதரர் யார்?
3. ஆடம்பர உடையணிந்து அரியணையில் வீற்றிருந்த மன்னனின் தோற்றம் எவ்வாறு இருந்தது?
4. தூக்கம் வராததால் எதனைப் படித்துக் காட்ட மன்னன் தன் பெயரைக் கேட்டான்?
5. ஆமான் ஏற்பாடு செய்திருந்த தூக்கு மரம் பற்றி மன்னரிடம் கூறிய அலுவலர் யார்?
6. மாசிடோனினாகிய ஆமானிடம் எந்த இரத்தம் இல்லை?
7. பூரிம் என்ற சொல்லுக்கு என்ன பொருள்?
8. மொர்தெக்காயின் கனவில் தோன்றிய ஆறு யாரைக் குறிக்கும்?
9. அன்னகர்களின் வழியாய் இட்ட கட்டளைப்படி செய்ய மறுத்த அரசியின் பெயர் என்ன?
10. புலனாய்வு செய்யப்பட்டு தூக்கிலிடப்பட்ட இருவரின் பெயர் என்ன?
11. அக்ஸ்வேர் மன்னன் ஆமோனிடம் கொடுத்தது என்ன?
12. எஸ்தரின் வாக்கின்படி அனைத்தையும் செய்தவரின் பெயர் என்ன?
13. திராட்சை மது விருந்தின்போது எஸ்தரை நோக்கி மன்னர் கூறியது என்ன?
14. எஸ்தர் எந்த குலத்தைச் சார்ந்தவள்?
15. எஸ்தர் அரசியின் தாயின் பெயர் என்ன?

கடந்த மாத நம்பிக்கைச் சுடர் இதழிலிருந்து

1. அன்னை தெரசா எந்த நாட்டை பூர்வீகமாக கொண்டார்?
2. நோபல் பரிசும், பாரத ரத்னா விருதும் அன்னை தெரசாவிற்கு கொடுக்கப்பட்ட ஆண்டு எது?
3. மரியன்னை பிறப்பு விழாவை முதல் முறையாக கொண்டாட ஆணையிட்ட திருத்தந்தையின் பெயர் என்ன?
4. திருச்சிலுவை கண்டுபிடித்த ஆண்டு மற்றும் தேதி என்ன?
5 தூய தந்தை பியோ எந்த துறவற சபையைச் சார்ந்தவர்?

விடைகள் வந்து சேர வேண்டிய கடைசி தேதி 20.10.2019

செப்டம்பர் மாத விவிலிய விடைகள் (நெகேமியா)

1. அக்கல்யா (1:1)
2. கிசிலேவு (1:1)
3. ஆசாபு (2:8)
4. நரி நீரூற்று (2:13)
5. சக்கூர் (3:2)
6. தெக்கோவாவின் உயர்குடி மக்கள் (3:5)
7. நரி (4:3)
8. வலக்கையில் (4:23)
9. யூத சகோதரர்கள் (5:8)
10. நாற்பது (5:15)
11. நான்கு (6:4)
12. தெலாயா (6:10)
13. ஏழாயிரத்து முந்நூற்று முப்பத்தேழு (7: 67)
14. ஏழாவது மாதம் (7: 73)
15. எஸ்ரா ((8:4)
16. ஏழு நாள் (8:18)
17. லேவியரான ஏசுவா, பானி, கெத்மியேல், செபானிபா, பூனி, செரேபியா, பானி, கெனானி (9:4)
18. சீகோன், எஸ்போன் அரசனின் நாடு, ஒரு அரசனின் நாடான பாசான் (9:22)
19. ஓரானியன் (13:28)
20. எருசலேம் (11:1)

கடந்த மாத நம்பிக்கைச் சுடரிலிருந்து (செப்டம்பர்)

1. சாந்தா, மார்த்தா
2. சங்லி ஜீலியூஸ் மான்சி
3. நேப்பில்ஸ்
4. ஏழாம்
5. Queen of Heaven

விளம்பரக் கட்டணம்

கால் பக்கம்	-	Rs. 250
அரைப்பக்கம்	-	Rs. 500
முழுப்பக்கம்	-	Rs. 1,500
ஆண்டுக்கட்டணம்	-	**10 மாதங்கள்**

தொடர்பு கொள்ள வேண்டிய எண்: 99403 31990, 99419 01367

புனித யூதா ததேயு- அக்டோபர் 28

புனித யூதா ததேயு முதலாம் நூற்றாண்டில் வாழ்ந்தவரும், இயேசுவின் பன்னிரு திருத்தூதர்களில் ஒருவருமாவார்.

புனித யூதா ததேயு, 'யூதேயா' (Judea), 'சமாரியா' (Samaria), 'சிரியா' (Syria), 'மெசபடோமியா' (Mesopotamia) மற்றும் லிபியா' (Libya) ஆகிய நாடுகளில் நற்செய்தி போதித்தார் என்று பாரம்பரிய செய்திகள் கூறுகின்றன. இவரும் பர்த்தலேமேயுவுமே ஆர்மீனியா நாட்டிற்கு கிறிஸ்தவத்தை கொண்டுவந்தனர் என்பர். அவர் 'பெய்ரூட்' (Beirut) மற்றும் 'எடெஸாவிற்கு' (Edessa) விஜயம் செய்ததாக கூறப்படுகிறது.

பதினான்காம் நூற்றாண்டின் வரலாற்றாசிரியரான 'நிஸ்பொரஸ் கல்லிஸ்டுஸ்' (Nicepheorus Callistus) என்பவரின் கூற்றின்படி, இயேசு கிறிஸ்து தமது அன்னையின் வேண்டுகோளின்படி, சாதாரண தண்ணீரை திராட்சை இரசமாக மாற்றிய முதல் அதிசயமான 'கானா' (Cana) ஊர் திருமணத்தில் மணமகனே புனிதர் யூதா ததேயு தான் என்கிறார். பிற்காலத்தில், ரோமர்களால் மீண்டும் கட்டப்பட்டு, 'செசரியா பிலிப்பி' (Caesarea Phillippi) என மறு பெயரிடப்பட்ட "கலிலேயாவிலுள்ள (Galilee) 'பனேஸ்' (Panesh) எனும் நகரிலுள்ள யூதர்கள் குடும்பத்தில் இவர் பிறந்தவர் என்றும் புராணங்கள் கூறுகின்றன.

இவர் கிரேக்கம் (Greek) மற்றும் 'அராமைக்' (Aramaic) மொழிகள் பேசினார். அந்த பகுதியில் உள்ள கிட்டத்தட்ட அவரது சமகாலத்தினவர்கள் அனைவரையும் போல, இவரும் விவசாயத்தையே தொழிலாக செய்து வந்தார்.

சுமார் கி.பி 67ம் ஆண்டு, ரோமப் பிரதேசமான 'சிரியாவின்' 'லெபனான்' நாட்டுத் தலைநகரும், பிரதான துறைமுகமுமான 'பெய்ரூட்' நகரில் இவர் கோடாரியால் வெட்டப்பட்டு மரித்தார். இவரது உடல், பின்நாளில் வத்திக்கானில் உள்ள புனித பேதுரு பேராலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு அடக்கம் செய்யப்பட்டது.

இவரது நினைவுத் திருவிழா நாள் அக்டோபர் 28 ஆகும்.

The National Shrine of St. Jude - Chicago

Claretian Fr. James Tort founded the National Shrine of St. Jude in 1929 at Our Lady of Guadalupe Church in Chicago. Fr. Tort was pastor of the parish and had been sent there by the Claretians to organize the construction of the church for a parish in need of hope and support. Many of his parishioners were dependent on work in the nearby steel mills, which were subject to national economic conditions of the 1920s.

Fr. Tort had a strong devotion to St. Jude Thaddeus, the patron saint of hope and hopeless or difficult causes, who was relatively unknown to the general Catholic population at that time. Night after night, however, he asked St. Jude for his intercession to help the workers of the parish. In an effort to lift the spirits of his parishioners, Fr. Tort began regular devotions to St. Jude, including the first Solemn Novena which was held on February 17, 1929.

The congregation at Our Lady of Guadalupe showed such great response to the devotion to St. Jude that an overflow crowd attended services on the final night of a Solemn Novena that ended on the Feast of St. Jude, October 28, 1929. More than 1,000 people stood outside the church to hear the service. Word of the devotions to St. Jude gradually spread from that tiny corner of Chicago to other parts of the country. During the Great Depression and World War II, thousands attended novenas at the National Shrine, and the devotion to the Patron of Hope grew throughout the country.

The Shrine receives petitions of need and gratitude from thousands of St. Jude devotees each year. These special intentions are delivered to the altar of St. Jude at the National Shrine, where the Claretians remember them in their Masses and prayers. A common practice among devotees was to thank St. Jude in the classified section of United States newspapers, reflecting that a petition was answered.

நம்பிக்கை வியாழன் சாட்சி -2



எனது பெயர் ரோஸ் மேரி. எனது கணவர் பெயர் மகேஷ். எங்களுக்குத் திருமணமாகி 9 வருடங்களாகிறது. குழந்தை வரம் கிடைக்கவில்லை.

நான் மாதவரம் புனித செபஸ்தியார் பங்கைச் சார்ந்தவள். நான் என் அம்மா வீட்டிற்கு வரும்பொழுது புனித யூதா ததேயு ஆலயத்திற்கு தவறாமல் வந்து திருப்பலி மற்றும் ஆராதனையில் பங்கெடுப்பேன். இரண்டு வருடங்களுக்கு முன்பு தவக்காலத்தில் காலை 11.00மணிக்கு நடைபெறும் சிலுவைப்பாதையில் எல்லா வெள்ளிக்கிழமைகளிலும் தவறாமல் பங்கெடுத்தேன். ஒருமுறை 7 ஸ்தலங்களுக்கு சிலுவையை சுமந்து செல்லும் பாக்கியம் கிடைத்தது. சிலுவையை சுமக்க செய்த நீரே குழந்தையையும் சுமக்க வையும் என்று உருக்கத்துடன் மன்றாடினேன். பங்குத்தந்தை மைக்கேல் சுரேஷ் அவர்கள் செபித்துக் கொடுத்த இறைவனை எதிர்நோக்கி இருக்கும் அன்னையின் செப அட்டையில் உள்ள செபத்தை செபித்து எம் புனிதர் புனித யூதா ததேயு வழியாக இறைவனிடம் செபித்தேன். என் செபமும், கண்ணீரும் வீண்போகவில்லை. என் இறைவன் எனக்கு 9 வருடங்கள் கழித்து குழந்தை வரம் கொடுத்துள்ளார். இப்பொழுது எனக்கு இது எட்டாம் மாதம். இதுவரை கரம் பிடித்து வழி நடத்திய இறைவன் என் பிரசவம் வரை என்னுடன் இருந்து சுகப்பிரசவம் அடைய கட்டளையிடுவார் என்ற நம்பிக்கையில் எனக்காக பரிந்துரைத்த எதிர்நோக்கும் அன்னைக்கும்,புனித யூதா ததேயுவிற்கும், எனக்காக செபித்த பங்குத் தந்தைக்கும் மற்றும் அனைத்து நல்ல உள்ளங்களுக்கும் மனமார்ந்த நன்றிகள்.

திருமதி. ரோஸ்லின் மகேஷ்
புனித செபஸ்தியார் பங்கு,
மாதவரம், சென்னை

05.09.2019
89254 12869

மறைக்கல்வி சிட்டுகளுக்கு

JOIN THE WORDS TO FINISH THE BIBLE BOOK NAMES

GEN	HUA
PRO	UM
COL	GES
OBA	ONICLES
HAB	GAI
HAG	OSSIANS
JUD	ESIS
CHR	AKKUK
NAH	DIAH
JOS	VERBS



விடைகள் வந்து சேர வேண்டிய கடைசி தேதி 20.10.2019

அக்டோபர் மாத ஞாயிறு திருப்பலி வாசகங்கள்

06.10.2019 பொதுக்காலத்தின் 27வது ஞாயிறு
முதல் வாசகம்: அபக்கூக்கு 1:2-3, 2:2-4
இரண்டாம் வாசகம்: 2 திமொத்தேயு 1:6-8, 13-14
நற்செய்தி: லூக்கா 17:5-10

சிறப்பிப்பவர்கள்: பங்கு இறைச்சமூகம்

13.10.2019 பொதுக்காலத்தின் 28வது ஞாயிறு
முதல் வாசகம்: 2 அரசர்கள் 5:14-17
இரண்டாம் வாசகம்: 2 திமொ 2:8-13
நற்செய்தி: லூக்கா 17:11-19

சிறப்பிப்பவர்கள்: புனித லூக்கா அன்பியம்

20.10.2019 பொதுக்காலத்தின் 29வது ஞாயிறு
முதல் வாசகம்: விடுதலைப் பயண நூல் 17: 8-13
இரண்டாம் வாசகம்: 2 திமொ 3:14-4,2
நற்செய்தி: லூக்கா 18: 1-8

சிறப்பிப்பவர்கள்: புனித யூதா, புனித சீமோன் அன்பியங்கள்

27.10.2019 பொதுக்காலத்தின் 30 வது ஞாயிறு
முதல் வாசகம்: சீராக் 35: 12-14, 16-18
இரண்டாம் வாசகம்: 2 திமொ 4: 6-8, 16-18
நற்செய்தி: லூக்கா 18: 9-14

சிறப்பிப்பவர்கள்: மறைக்கல்வி மாணவ மாணவிகள்

திருவிழா முன்தயாரிப்பு தியானம்

17.10.2019- வியாழன் : ஜெபமாலை, இறைசெய்தி பகிர்வு, திருப்பலி
மாலை 6.00 முதல் 9.00 வரை
சிந்தனை: **மனம் மாறி நற்செய்தியை நம்புங்கள்...**

18.10.2019 - வெள்ளி : ஜெபமாலை, இறைசெய்தி பகிர்வு, திருப்பலி
மாலை 6.00 முதல் 9.00 வரை
சிந்தனை: **ஆவியிலும் உண்மையிலும் வழிபடுவோம்...**

19.10.2019 - சனி : ஜெபமாலை, இறைசெய்தி பகிர்வு, திருப்பலி
மாலை 6.00 முதல் 9.00 வரை
சிந்தனை: **நீங்களே அவ்வாலயம்.....**

வழிநடத்துத்துபவர்: பணி. A. மார்டின் ஜோசப்

அக்டோபர் மாத சிறப்பு நிகழ்வுகள்

03.10.2019 முதல் வியாழன் - நம்பிக்கை வியாழன் (3 திருப்பலிகள்)
காலை: 6 மணி ஆராதனை அதைத் தொடர்ந்து திருப்பலி
பகல் 10:30 மணிக்கு திருச்செபமாலை, பகல் 11.00 மணிக்கு சிறப்பு நவநாள் செபம், நற்கருணை வழிபாடு, குணமளிக்கும் செபம், திருப்பலி, சாட்சி பகிர்வு, பகல் உணவு
மாலை 6.30 மணிக்கு செபமாலை, சிறப்பு நவநாள் செபம், நற்கருணை ஆசீர், திருப்பலி மற்றும் தேர்பவனி.
வழிநடத்துபவர்: அருட்பணி. மைக்கேல் சுரேஷ் (பங்குத் தந்தை, தச்சூர்)

05.10.2019முதல் சனி - காலை 6.30 தமிழில் திருப்பலி
மாலை 6.30 மணிக்கு செபமாலை, 7.00 மணிக்கு குழந்தை வரம் வேண்டும் தம்பதியருக்கு சிறப்பு செபம், ஆராதனை, ஆசீர்வாதம் மற்றும் திருப்பலி
வழிநடத்துபவர்: பணி. A. மார்ட்டீன் ஜோசப்

06.10.2019முதல் ஞாயிறு - First Sunday
பகல் 11.00 மணிக்கு ஆங்கிலத்தில் சிறப்பு நவநாள் செபம், நற்கருணை வழிபாடு
(11.00 am English Novena Prayer, Benediction, Holy Mass)
வழிநடத்துபவர்: Rev. Fr. Solomon

நித்திய இளைப்பாற்றி தந்தருளும்

நான் நல்லதொரு போராட்டத்தில் ஈடுபட்டேன்; என் ஓட்டத்தை முடித்து விட்டேன். விசுவாசத்தைக் காத்துக் கொண்டேன்.

2 திமொத்தேயு 4:7

திருமதி. ரெமினா பெர்னான்டோ
வயது: 71
விண்ணில்: 24.09.2019

பிரிவால் வாடும் குடும்பத்தார்க்கு எங்களின் ஆழ்ந்த இரங்கலும், மற்றும் செபங்களும்

First Thursday Adoration, Holy Mass & Car Procession

Birthday Celebration of Rev.Fr.Vallapadoss

புனித வின்சென்ட் தே பவுல் சுருபம் திருத்தலத்தில் நிறுவப்பட்டது

Winners of Bible Competition for catechism students held on 22-Sept-2019

http://www.st-judesshrine.com/

Like https://www.facebook.com/st.judesShrineVanuvampet/